ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(01) கத்தோலிக்க விசுவாசம்
The Catholic Faith

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பகுதி I இன் **முதலாம்** மற்றும் **இரண்டாம்** வினாக்களுக்கும் **பகுதி II** இல் தெரிவு செய்யப்பட்ட **நான்கு** வினாக்களுக்குமாக **ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
பகுதி I இற்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதி **பகுதி II** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

சுட்டெண் :..................................

பகுதி I

1. (i) தொடக்கம் (x) வரையுமான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகவும் பொருத்தமான** விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(i) 450 கோடி வருடங்களுக்கு முன்பு உலகம் ஆரம்பமானது என்பது யாருடைய கூற்றாக இருக்கிறது?
(1) தொழிலாளர்களின் (2) துறவறத்தாரின்
(3) விஞ்ஞானிகளின் (4) சமூகவாதிகளின் (.........)

(ii) மிகவும் அழகாக உள்ள வானவில் மனிதனுக்கு என்ன கருத்தை உணர்த்துகிறது?
(1) தெய்வீக பராமரிப்பு (2) இறைதண்டனை
(3) இறை ஒளி (4) இறைவனின் சாபம் (.........)

(iii) திருவிவலியத்திலே புதிய ஏற்பாட்டில் எத்தனை பேறுகள் பற்றி சொல்லப்படுகிறது?
(1) மூன்று (2) எட்டு (3) பத்து (4) பன்னிரெண்டு (.........)

(iv) வேதனை, துன்பங்கள் என்பவற்றை அனுபவிக்கின்றபோது ஆண்டவர் எம்மோடு இருக்கிறார் என்பதை நினைவுறுத்தி அதற்காக அவர் தரும் பரிசு,
(1) திருச்சபையில் அங்கத்துவம். (2) விண்ணக அரசின் உரிமை.
(3) லௌகீக செல்வங்கள் அனைத்தும். (4) அதிக துன்பங்களின் உரிமை. (.........)

(v) தானதருமம் பற்றிய யேசுவின் போதனை,
(1) அதனை பகிரங்கமாக செய்ய வேண்டும் என்பது.
(2) அதனை மறைவாக செய்ய வேண்டும் என்பது.
(3) அதனை இடையிடையே செய்ய வேண்டும் என்பது.
(4) அதனை செல்வந்தர் செய்ய வேண்டும் என்பது. (.........)

(vi) விதைப்பவர் பற்றிய உவமையில் விதைப்பவர் யாரை அடையாளப்படுத்துகிறார்?
(1) தற்காலிக உரிமையாளரை
(2) இறை அரசு பற்றிய செய்தியை வெளிப்படுத்துபவரை
(3) உலக மறை பற்றிய செய்தியை வெளிப்படுத்துபவரை
(4) குத்தகைக்கு தோட்டத்தை எடுத்திருப்பவரை (.........)

(vii) புதையல் பற்றிய உவமையில் புதையல் என்பது எதனை குறிக்கிறது?
(1) மாய மந்திரம் (2) பில்லி சூனியம்
(3) உடன்படிக்கை பேழை (4) உலகம் (.........)

(viii) "உயிர்த்தெழுதலும், வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைக் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" எந்த அரும் அடையாளத்தை செய்தபோது யேசு இவ்வாறு கூறினார்?
(1) புயலை அடக்குகின்றபோது
(2) முடக்குவாதமுற்றவரை குணப்படுத்தியபோது
(3) யாயீரின் மகளைக் குணமாக்கியபோது
(4) இலாசரை மரணத்தினின்று உயிர்ப்பித்தபோது (.........)

[பக் 2 ஐப் பார்க்க.

(ix) இயற்கையின் சீற்றங்களை இறைநம்பிக்கை மூலம் யாரால் அடக்க முடியும்?
(1) சுற்றாடல் பொறுப்பாளரால் (2) அரச அதிகாரியால்
(3) இறைவனால் (4) மனிதரால் (.........)

(x) கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் தலையாயிருப்பவர்,
(1) மனிதன் (2) கிறிஸ்து (3) மரியாள் (4) சூசை (.........)

(02 × 10 = 20 புள்ளிகள்)

● எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்குக.

2. (i) கிறிஸ்து திருச்சபையை மூன்று படிமுறைகளாக ஏற்படுத்தினார். அவற்றில் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(ii) ஆணாகவும் பெண்ணாகவும் மனிதனைப் படைத்த இறைவன் அவர்களுக்கு ஆசி வழங்கி கூறிய வாக்கியங்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iii) தூய யோவான் நற்செய்தியில் ஒளி பற்றி குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iv) "இரக்கமுடையோர் பேறு பெற்றோர்" இந்த பேற்றினை அடைவதற்கான செயற்பாடுகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(v) "அமைதி" யை விளக்குவதற்கு **இரண்டு** விடயங்களை எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(vi) விண்ணரசு பற்றி கூறும் உவமைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ....

(ஆ) ....

(vii) இயற்கை சீற்றத்தை அடக்குதல், மீண்டும் உயிர் அளித்தல் ஆகியன பற்றி குறிப்பிடும் அரும் அடையாளங்கள் (புதுமைகள்) **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ....

(ஆ) ....

(viii) துறவற வாழ்வுக்கு உட்படுவோர் அளிக்கும் வார்த்தைப்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(அ) ....

(ஆ) ....

(ix) திருமுழுக்கின் வழியாக எமக்கு அளிக்கப்படும் பொறுப்புகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(x) மரணத்தைப் பற்றி கூறப்பட்டுள்ள விடயங்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(02 × 10 = 20 புள்ளிகள்)

❊❊

[பக் 3 ஐப் பார்க்க.

776

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(01) கத்தோலிக்க விசுவாசம்

The Catholic Faith

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பகுதி II

3. (i) இறைவனுக்கே உரிய விசேட பண்புகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) வாழ்விலே பல்வித நிகழ்வுகளின் மத்தியில் மனிதன் இறைவனை நோக்கி வேண்டுதல் செய்யும் சந்தர்ப்பங்கள் **ஐந்தை** சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

4. (i) தொடக்கநூல் முதலாம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி இறைவனால் படைக்கப்பட்டவைகள் **ஐந்தைப்** பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) படைப்பினை நீர் இன்று பாதுகாக்கும் விதத்தை **ஐந்து** காரணிகள் தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

5. (i) 'பேறுகளில்' **ஐந்தைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மனமுடைந்தவர்களுக்கு நிலையான அமைதியை ஏற்படுத்துவதில் நீர் பங்காற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் **ஐந்தை** விளக்குக. *(10 புள்ளிகள்)*

6. (i) தூய மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மலைப் பொழிவில், முன்வைக்கப்பட்டுள்ள பிரதான ஆய்வு பொருள்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மலைப் பொழிவில் நீர் குறிப்பிட்டுள்ள ஆய்வு பொருள்களை உமது வாழ்வில் கொண்டு வாழும் விதம் **ஐந்தை** விளக்குக. *(10 புள்ளிகள்)*

7. (i) 1 கொரி. 12 : 4 - 11 இன்படி தூய ஆவியிடமிருந்து கிடைக்கும் கொடைகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) நீர் குறிப்பிட்டுள்ள தூய ஆவியின் கொடைகள் ஒவ்வொன்றினதும் உதவியுடன், இளைஞர் பிரச்சனைகளில் **ஐந்தை** வெற்றி கொள்ளும் விதத்தை சுருக்கமாக எழுதுக. *(10 புள்ளிகள்)*

8. (i) உரோ -12 : 4 - 21 இல் தூய பவுல் குறிப்பிட்டுள்ள, மறையைப் பரப்புவதற்காக கிடைத்துள்ள பல்வித திறமைகளில் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) திருச்சபையின் வளர்ச்சிக்காக நீர் பெற்றுள்ள பல்வித தாலந்தைப் பயன்படுத்தும் விதத்தை **ஐந்து** காரணிகள் தந்து விளக்குக. *(10 புள்ளிகள்)*

9. (i) பொது நிலையினரின் பொறுப்புக்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) துறவற வாழ்வில் அருட்சகோதரியாக அல்லது குருவாக இணைய விரும்பும் உமது நண்பன் அல்லது நண்பிக்கு நீர் அளிக்கக் கூடிய அறிவுரைகள் **பத்தை** எழுதுக. *(10 புள்ளிகள்)*

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(02) கத்தோலிக்க வாழ்விற்கான வழி
The Way of Catholic Life

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பகுதி I இன் **முதலாம்** மற்றும் **இரண்டாம்** வினாக்களுக்கும் **பகுதி II** இல் தெரிவு செய்யப்பட்ட **நான்கு** வினாக்களுக்குமாக **ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
பகுதி I இற்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதி **பகுதி II** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

சுட்டெண் :.................................

பகுதி I

1. **(i)** தொடக்கம் **(x)** வரையுமான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகவும் பொருத்தமான** விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(i) திருவழிபாட்டின் மையமாக இருப்பது,
(1) தேவநற்கருணை (2) திருமணி ஆராதனை நடாத்துதல்
(3) நவநாள் பக்தி (4) திருப்பலி (.........)

(ii) திருச்சபையின் மேன்மையான புனித பணி இவற்றுள் எதுவாகும்?
(1) கிறிஸ்தவ ஒன்றியத்தை ஏற்படுத்துதல் (2) இறைமக்களை ஒன்று கூட்டுதல்
(3) திருவழிபாடு நடாத்துதல் (4) கைவிடப்பட்டோருக்கு உதவுதல் (.........)

(iii) திருச்சபையின் ஆரம்ப காலத்தில் நற்கருணை கிறிஸ்தவர்களால் இவ்வாறு அழைக்கப்பட்டது,
(1) ஆண்டவரின் உணவு (2) அப்பம் பிட்கும் சடங்கு
(3) நன்றி கூறும் சடங்கு (4) பங்கு கொள்வோரின் உணவு (.........)

(iv) மக்கள் பணிக்காக உருவாக்கப்பட்ட அருளடையாளங்கள்
(1) தேவநற்கருணை, குருத்துவம் (2) குருத்துவம், நோயில் பூசுதல்
(3) நோயில் பூசுதல், குருத்துவம் (4) திருமணம், உறுதிபூசுதல் (.........)

(v) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வியில் 'குருத்துவம்' என்பதன் கருத்தை விளக்குவதற்கு இந்த திருமுகத்திலிருந்து மேற்கோள் தரப்படுகிறது
(1) எபிரேயர் திருமுகம் (2) கொலோசியர் திருமுகம்
(3) உரோமையர் திருமுகம் (4) திமொத்தேயு திருமுகம் (.........)

(vi) பழைய ஏற்பாட்டில் மெல்கிசதெக் குரு முக்கியமானவராயிருப்பது,
(1) அப்ப இரசத்தை ஆண்டவருக்கு பலியாக முதலில் கொடுத்தவர் அவர் என்பதால்
(2) உடன்படிக்கை பேழையைப் பாதுகாத்ததால்
(3) ஆகாரபலி ஒப்புக் கொடுத்ததால்
(4) தலைமைக் குருவாக பணியாற்றியதால் (.........)

(vii) திருப்பியில் மறையுரைக்கு உரிய இடமளித்து அதன் முக்கியத்துவம் காட்டப்பட்டிருப்பது,
(1) நிசியான் சங்கத்தில் (2) முதலாம் வத்திக்கான் சங்கத்தில்
(3) திரிதெந்தீன் சங்கத்தில் (4) இரண்டாம் வத்திகான் சங்கத்தில் (.........)

(viii) கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சி பெற்று பலன் அளிக்க வேண்டுமாயின் அடிக்கடி,
(1) நற்செயல்கள் செய்ய வேண்டும்
(2) அருளடையாளங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்
(3) ஒறுத்தல் முயற்சிகள் செய்ய வேண்டும்
(4) செபிக்க வேண்டும் (.........)

[பக் 2 ஐப் பார்க்க.

(ix) யேசுவின் உயிர்ப்பினால் உண்டான முக்கிய நிகழ்வு
(1) உலகில் வாழ்வோருக்கு புதிய வாழ்வு கிடைத்தமை
(2) பாவம் அழிந்துவிடுதல்
(3) மரணத்தின் பலம் முறிந்துவிடுதல்
(4) விண்ணரசு திறக்கப்பட்டமை (.........)

(x) இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் அக்காலத்து திருப்பலியின் மாதிரி திட்டத்தை முன்வைப்பதற்கு உழைத்தவருமான வேதசாட்சி யாராவார்?
(1) தூய தோமஸ் அக்குவைனஸ் (2) தூய அகுஸ்தினார்
(3) தூய பவுல் (4) தூய ஜஸ்டின் (.........)

(02 × 10 = 20 புள்ளிகள்)

- **எல்லா** வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்குக.

2. (i) திருவழிபாட்டின் (திருப்பலியின்) அடிப்படை பிரிவுகள் **இரண்டை**யும் எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(ii) கத்தோலிக்க திருச்சபையில் திருத்தொண்டருக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iii) அழியா முத்திரையைப் பதிக்கின்ற அருளடையாளங்கள் **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ....

(ஆ) ....

(iv) திருப்பலியின் முக்கிய சடங்குகள் **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ....

(ஆ) ....

(v) ரோமன் கத்தோலிக்க முறைப்படி உறுதிப்பூசுதல் என்னும் அருளடையாளம் எவ்வாறு வழங்கப்படுகிறது?

....

....

(vi) பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை யேசு எப்போது தம் திருத்தூதர்களுக்கு வழங்கினார்?

....

(vii) இறைவார்த்தைக்கு செவிசாய்ப்பதாலும் அதனை வாசிப்பதாலும் பெறக்கூடிய பயன்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(viii) திருப்பலி சடங்கில் மிகவும் முக்கியமானதும் மேன்மையானதுமான செபம் யாது? அந்த செபத்தை சொல்லும்போது என்ன நிகழ்கிறது?

....

....

(ix) இறைவன் பாவிகளை எல்லையற்ற விதத்தில் அன்பு செய்கிறார் என்பதைக் காட்டுவதற்கு தூய லூக்கா முன்வைக்கும் உவமைகள் **இரண்டைப்** பெயரிடுக.

(அ) ....

(ஆ) ....

(x) நோயில் பூசுதல் பற்றி தூய யாக்கோபு திருமுகத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது?

....

....

(02 × 10 = 20 புள்ளிகள்)

* *

[பக் 3 ஐப் பார்க்க.

775

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(02) கத்தோலிக்க வாழ்விற்கான வழி

The Way of Catholic Life

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பகுதி II

3. (i) அருளடையாளமாவதற்கு அத்தியாவசியமான அடிப்படைக் காரணிகளை சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) அருளடையாளங்களின் வழியாக கிறிஸ்தவனின் வாழ்வில் ஏற்படும் தாக்கங்களை விளக்குவதற்கு **ஐந்து** விடயங்களை முன்வைக்குக. *(10 புள்ளிகள்)*

4. (i) "திருப்பலி ஒரு தூய பலியாகும்." இதனை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) ஞாயிறு திருப்பலியில் கருத்துடன் பங்குகொள்வதற்காக நீர் செய்யக்கூடிய செயற்பாடுகள் **ஐந்தை** எழுதுக. *(10 புள்ளிகள்)*

5. (i) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலில், திருமண வாழ்க்கை, இறைமக்களைக் கட்டியெழுப்புவதில் எவ்வாறு முக்கியத்துவம் வகிக்கிறது என காட்டப்பட்டுள்ளது? *(05 புள்ளிகள்)*

(ii) "வெற்றியான திருமணத்திற்கு இருவரினதும் அன்பும் விருப்பமும் மட்டுமல்ல திருச்சபையிலிருந்து கிடைக்கும் வழிகாட்டலும் உதவியும் பயனுள்ளதாக இருக்கிறது." **ஐந்து** காரணிகள் தந்து இதனை சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

6. (i) நோயில் பூசுதல் என்னும் அருளடையாளத்தினால் கிடைக்கும் அருள்வரங்கள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) நோயில் பூசுதல் என்னும் அருளடையாளத்தை அளிக்கும் சடங்கின்போது நடைபெறும் செயற்பாடுகள் **ஐந்தை** விளக்குக. *(10 புள்ளிகள்)*

7. (i) உயிர்ப்பு பற்றிய நம்பிக்கையில் சோதனைக்குட்பட்ட திருத்தூதர் தோமஸ் உடன் தொடர்புடைய நிகழ்வை எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) உமது வாழ்வில் நம்பிக்கையை அனுபவித்த நிகழ்வொன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

8. (i) ஒப்புரவு அருளடையாளத்தினால் பெறும் வரங்கள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) மன்னிக்க மறுத்த பணியாளன் பற்றிய உவமையை எழுதி அதிலிருந்து பெற்றுக்கொள்ளும் செய்திகள் **இரண்டை** எழுதுக. *(10 புள்ளிகள்)*

9. பின்வருவனவற்றில் **மூன்றிற்கு** சிறுகுறிப்பு எழுதுக. (ஒவ்வொன்றுக்கும் ஐந்து வரிகளளவில்)

(i) தேவநற்கருணை புகழ்ச்சி பாடல்

(ii) திருப்பலியில் ஒப்புக்கொடுக்கும் சடங்கு

(iii) முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவ நிலை

(iv) ஆயர் நிலை

(v) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி காட்டும் தனிமைநிலை வாழ்க்கை

(05 × 3 = 15 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(03) கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு
The Catholic Moral Life

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பகுதி I இன் **முதலாம்** மற்றும் **இரண்டாம்** வினாக்களுக்கும் **பகுதி II** இல் தெரிவு செய்யப்பட்ட **நான்கு வினாக்களுக்குமாக ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
பகுதி I இற்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதி **பகுதி II** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

சுட்டெண் :..............................

பகுதி I

1. **(i)** தொடக்கம் **(x)** வரையுமான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகவும் பொருத்தமான** விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(i) மனிதனின் முன்னேற்றத்திற்கான சமூக உறவுகளில் முக்கியமானது இவற்றுள் எதுவாகும்?
(1) தாம் வாழுகின்ற சூழல் (2) தாம் பெற்றுள்ள திறமைகள்
(3) தாம் பெற்றுள்ள கல்வி (4) தமது குடும்ப வாழ்க்கைக் கோலம் (.........)

(ii) "இயற்கை மறையின் செயற்பாடு .... வருவதால் அது தூய்மையானது, நன்மையானது"
இடைவெளிக்குரிய சரியான சொல் யாது?
(1) தூயாவிடமிருந்து (2) தூயவர்களிடமிருந்து
(3) இறைவனிடமிருந்து (4) மரியாளிடமிருந்து (.........)

(iii) விழுமியத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் பண்பு என கீழ்காணும் விடயத்தை ரஞ்சித் எழுதியிருந்தார். அதற்கேற்ப **பொருந்தாத** விடயம் எதுவாகும்?
(1) நீதியாக ஆட்சி புரிதல் (2) தமது விருப்பத்தின்படி வாழ்வதற்கு சுதந்திரம் உண்டு.
(3) அமைதி நிலவும். (4) நீதி நேர்மை செயற்படும். (.........)

(iv) கீழே தரப்பட்டுள்ளவற்றில் கடன்திருநாள் ஆக அமைவது எது?
(1) இறைவனின் அன்னையாகிய மரியாளின் திருவிழா
(2) மரியாளின் பிறந்தநாள்
(3) தேவதாயின் மாசற்ற இருதய விழா
(4) தேவதாய் லூர்து நகரில் காட்சி கொடுத்த நாள் (.........)

(v) ஜோதிடம், ரேகை, மைபார்த்தல் ஆகியவற்றில் நம்பிக்கை கொள்பவர்,
(1) முதலாவது இறைக் கட்டளையை மீறுகிறார்.
(2) இரண்டாவது இறைக் கட்டளையை மீறுகிறார்.
(3) மூன்றாவது இறைக் கட்டளையை மீறுகிறார்.
(4) ஏழாவது இறைக் கட்டளையை மீறுகிறார். (.........)

(vi) "உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்களிக்கும் நாட்டில் உன் வாழ்நாள்கள் நீடிக்கும்படி உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" இவ் இறை வார்த்தை காணப்படும் நூல்
(1) தொடக்க நூல் (2) விடுதலைப் பயணம்
(3) திருவுரையாளர் நூல் (4) அரசர் நூல் (.........)

(vii) ஆண், பெண், விதவைகள், கன்னிப் பெண்கள் ஆகியோர் கடைப்பிடிக்க வேண்டிய தூய்மையான கற்பு பற்றி குறிப்பிடுபவர்
(1) தூய அகுஸ்தினார் (2) தூய தோமஸ் அக்குவைனஸ்
(3) தூய அம்புறோஸ் (4) தூய பிரான்சிஸ் (.........)

(viii) ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் அவருக்கு மேலும் அதிகமாக எதனை அளிக்க வேண்டுமென யேசு கூறினார்?
(1) இடைகச்சையையும் அளிக்குமாறு
(2) மேலும் சில சட்டைகளை அளிக்குமாறு
(3) பதிய ஆடைகளை அளிக்குமாறு
(4) மேலுடைகளையும் அவர் எடுத்துக்கொள்ள அளிக்குமாறு (.........)

[பக் 2 ஐப் பார்க்க.

(ix) நிமல் தனது வீட்டுத் தோட்டத்தை அசுத்தமாக வைத்திருந்ததால் டெங்கு கிருமிகள் பெருகுவதற்கு இடமளித்துள்ளார். இதனால் அவர் எத்தனையாவது கட்டளையை மீறுகிறார்?
(1) முதலாவது இறைக் கட்டளையை (2) இரண்டாம் இறைக் கடட்டளையை
(3) நான்காவது இறைக் கட்டளையை (4) ஐந்தாம் இறைக் கட்டளையை (.........)

(x) இலங்கை கத்தோலிக்க திருச்சபை இந்த ஆண்டிலே அர்ப்பணிக்கப்பட்டிருப்பது,
(1) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ்க்கு (2) கர்தினால் தோமஸ் குரேக்கு
(3) தூய யோசேவாஸ்க்கு (4) ஆயர் மேதகு எட்மன் பீரிஸ்க்கு (.........)

(02 × 10 = 20 புள்ளிகள்)

- **எல்லா** வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்குக

2. (i) கிறிஸ்தவ மறையின் அடிப்படை பண்பு யாது?

....

....

(ii) பத்திரிகை செய்தியாளர்களின் கடமைகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iii) சமூக கொள்கை தொடர்பாக திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர் வெளியிட்ட திருச்சபையின் படிப்பினைகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iv) புனிதர்களுக்கு நாம் ஏன் மதிப்பளிக்க வேண்டும்?

....

....

(v) இறைவனால் படைக்கப்பட்ட மனிதர் அனைவரிலும் இறைசாயல் உண்டு. இதனால் கருதப்படுவது என்ன?

....

....

(vi) இன்றைய சமூகத்தில் மனித மாண்பை அழிக்கின்ற செயற்பாடுகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(vii) பொது சட்டங்களை மதித்தல், திருச்சபையை ஆள்வோருக்கு கீழ்ப்படிதல் ஆகிய செயல்கள் எத்தனையாம் இறை கட்டளைக்குள் அடங்குகின்றன?

....

....

(viii) ஒருவரின் உள்ளத்தின் உணர்ச்சிகளினால் உண்டாகும் பலன்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(ix) செயற்பாடுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கு முன்மாதிரிகையான எட்டு பேறுகளை முன்வைக்கும் நற்செய்தியாளர் யார்?

....

(x) பழைய ஏற்பாட்டிலே மக்கள் ஓய்வு நாளை முக்கிய நாளாக கருத்தில் கொள்வதற்கு ஏதுவான காரணிகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(02 × 10 = 20 புள்ளிகள்)

* *

[பக் 3 ஐப் பார்க்க.

775

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(03) கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

The Catholic Moral Life

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பகுதி II

3. (i) மலைப்பொழிவின் மூலம் கிறிஸ்து கற்பித்த படிப்பினைகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) ஏழாம் இறைக்கட்டளைக்கேற்ப வாழ்வதற்கு நீர் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் **ஐந்தை** எழுதுக. *(10 புள்ளிகள்)*

4. (i) இலங்கை மக்களுக்கே உரிய விழுமியங்கள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) கிறிஸ்து கற்பித்த சமூக விழுமியங்கள் **ஐந்தை** விளக்குக. *(10 புள்ளிகள்)*

5. (i) ஆண்டவர், மோசே மூலம் பத்து கட்டளையை அளித்ததன் நோக்கத்தை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) பத்து கட்டளைக்கேற்ப வாழும்போது அன்பின் கட்டளைகள் இரண்டும் முழுமை பெறுகிறது என்பதை திருவிவிலியத்திலிருந்து **100** சொற்களளவில் விளக்குக. *(10 புள்ளிகள்)*

6. (i) ஐந்தாம் இறைக்கட்டளை தரும் படிப்பினைகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) இன்று இலங்கையில் தற்கொலைகள் அதிகரித்து வருவதை காண்கிறோம். இதற்கான காரணங்கள் **ஐந்தை** எழுதுக. *(10 புள்ளிகள்)*

7. (i) ஞாயிறு திருப்பலியில் செயற்பாடுடன் பங்கு கொள்ளும் வழிமுறைகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) ஞாயிறு மற்றும் கடன்திருநாட்களின் முக்கியத்துவத்தைப் பற்றி கத்தோலிக்க மறை சஞ்சிகையொன்றிற்கு **100** சொற்களளவில் ஆக்கம் ஒன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

8. (i) தூய லூக்கா காட்டுவதன்படி பேறுகளுக்கும் கேடுகளுக்கும் ஏதுவான காரணிகள் **ஐந்தை** எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ii) "குடும்பத்திலுள்ள வலிமைமிகு நல்லுறவானது முழு சமூகத்தினதும் நல்லுறவுக்கு அடிப்படையாக உள்ளது" இதனை **100** சொற்களவில் விளக்குக. *(10 புள்ளிகள்)*

9. கீழ்காணும் தலைப்புகளில் **மூன்றை** தெரிவு செய்து, ஒவ்வொன்றுக்கும் **ஐந்து** வரிகளளவில் சிறுகுறிப்பெழுதுக.

(i) மனச்சான்று

(ii) பத்து கட்டளை

(iii) தானதருமத்தின்போது பின்பற்ற வேண்டிய கொள்கைகள்

(iv) சிறுவர் துஷ்பிரயோகத்தை இல்லாதொழித்தல்

(v) சரீர நற்செயல்கள்

(05 x 3 = 15 புள்ளிகள்)

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(04) செப வாழ்வு
The Life of Prayers

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

பகுதி I இன் **முதலாம்** மற்றும் **இரண்டாம்** வினாக்களுக்கும் **பகுதி II** இல் தெரிவு செய்யப்பட்ட **நான்கு வினாக்களுக்குமாக ஆறு** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
பகுதி I இற்கான விடைகளை **இத்தாளிலேயே** எழுதி **பகுதி II** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.

சுட்டெண் :...............................

பகுதி I

1. **(i)** தொடக்கம் **(x)** வரையுமான ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான அல்லது மிகவும் பொருத்தமான** விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தை** வினாவின் எதிரேயுள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

(i) செபித்தல் எமது கடமையாக இருப்பது,
   (1) அது கிறிஸ்தவ கொள்கையாக இருப்பதால் ஆகும்.
   (2) இறைவன் எமது ஆண்டவராக இருப்பதால் ஆகும்.
   (3) செபத்தை யேசு எமக்குக் கற்றுத் தந்திருப்பதால் ஆகும்.
   (4) எப்போதும் இறை மகிமைக்கு நாம் பணிந்திருக்க வேண்டும் என்பதால் ஆகும். (.........)

(ii) கத்தோலிக்க திருச்சபை புதிய மறைக்கல்வி வெளிப்படுத்துவதன்படி இறைவனின் அழைப்பிற்கேற்ப ஆபிரகாம் அளித்த பதில்,
   (1) இதயத்திற்கு (உள்ளத்திற்கு) அவதானத்தையளித்தலாகும்.
   (2) ஒரே இறை கொள்கைக்கு அளித்த மதிப்பாகும்.
   (3) இறைவனிலுள்ள சிறப்புத் தன்மையாகும்.
   (4) இறை ஆராதனைக்கு தமது விருப்பத்தை வெளிப்படுத்துவதாகும். (.........)

(iii) ஆண்டவரை ஒரு விருந்தினராக ஆபிரகாம் வரவேற்ற இடம் எது?
   (1) செக்கேம் (2) பெயர்ஷேபா (3) ஊர் (4) மம்ரே (.........)

(iv) பழைய ஏற்பாட்டில் இறைவனுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டவராக காட்டப்படுபவர் என்பதில் சரியாக அமைபவர்
   (1) யோசேப் (2) மோசே (3) ஈசாக் (4) யாக்கோபு (.........)

(v) யேசுவின் செபத்திற்கு இறைதந்தை செவி சாய்த்தமைக்கான காரணம்
   (1) அவர் தமது ஒரே மகனானபடியால்
   (2) மிகவும் தியானத்தோடு செபித்தப்படியால்
   (3) இறை மாண்புடன் பிதாவின் விருப்பத்திற்கேற்ப செபித்தமையால்
   (4) உள்ளத்தைத் தொடும் விதத்தில் செபத்தை முன்வைத்தமையால் (.........)

(vi) இறைவன் எமக்குத் தந்த அனைத்திற்காகவும் கடவுளைப் போற்றி புகழுவதற்காக நாம் கிறிஸ்துவின் 'ஆமென்' என சொல்லுவதாக தூய பவுல் குறிப்பிடுவது எந்த திருமுகத்திலாகும்?
   (1) பிலிப் திருமுகத்தில் (2) கொரிந் திருமுகத்தில்
   (3) ரோமர் திருமுகத்தில் (4) தெச திருமுகத்தில் (.........)

(vii) "திருமணி பக்தியை" உலகிற்கு அறிமுகம் செய்தவர்,
   (1) தூய அன்னை திரேசா (2) தூய ஹெலேனா
   (3) தூய மரிய கொறற்றி (4) தூய மாகரித் மரியாள் (.........)

(viii) திருச்சபை வரலாற்றில் "முதலாவது நவநாள்" நடாத்தப்பட்டது
   (1) திருத்தூதரினால்
   (2) குருக்களினால்
   (3) திருச்சபைத் தந்தையரால்
   (4) துன்புறுத்தல் காலத்தில் வாழ்ந்த விசுவாசிகளினால் ஆகும். (.........)

[பக் 2 ஐப் பார்க்க.

(ix) கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்தரும் தமது திருப்பலியில் இணைத்துள்ள செபம்
(1) விசுவாச பிரமாணம் (2) அமைதியின் செபம்
(3) பாவசங்கீர்த்தன செபம் (4) யேசு கற்பித்த செபம் (.........)

(x) இறைவன் தூய இடத்தில் வீற்றிருப்பதுபோல நேர்மையான உள்ளங்களிலும் இருக்கிறார் என எமக்கு கூறியவர்,
(1) தூய அம்புறோஸ் (2) தூய அக்குசைனஸ்
(3) தூய அகுஸ்தினார் (4) தூய ஜெரோம் (.........)

(02 × 10 = 20 புள்ளிகள்)

● எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளிக்குக.

2. (i) கத்தோலிக்க செபங்களைப் பார்க்கும்போது இறைவனை நோக்கி செலுத்த வேண்டிய பொது பண்புகள் நான்கில் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(ii) யேசு தம் வாழ்விலே செபித்த விசேஷ சந்தர்ப்பங்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(iii) கத்தோலிக்க மறைக்கல்வி கற்பிப்பதற்கேற்ப எமது செபம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை சுருக்கமாக எழுதுக.

....

....

(iv) உள்ளத்தால் (இதயத்தால்) சொல்லும் செபம் என்றால் என்னவென்பதை சுருக்கமாக எழுதுக.

....

....

(v) யேசு மரண வேதனைப்படும்போது செய்த செபம் பற்றி (எபி 5/7ல்) எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

....

....

(vi) செபிக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் பற்றி அளவுக்கு மீறி நாம் கவலைப்படக் கூடாது. நல்ல முறையில் செபிப்பதற்கு தூய ஆவி எமக்கு துணை புரிவதாக உரோ - (8/26) இல் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

....

....

(vii) ஆலயங்களிலே வருடாந்த திருவிழாவுக்கு ஆயத்தம் செய்யும் முகமாக நவநாட்கள் நடாத்தப்படுவதன் நோக்கங்கள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(viii) செபமாலை சொல்லும்போது மகிமை மறைநிகழ்ச்சிகளிலே நாம் தியானிக்கும் யேசுவின் மறை உண்மைகளின் மிக முக்கிய நிகழ்வுகள் **இரண்டை** எழுதுக.

(அ) ....

(ஆ) ....

(ix) பரலோக மந்திரத்தில் நாம் சொல்லுகின்ற மன்னிப்பளித்தல் பற்றி சரியாக நாம் காரியமாற்றாவிடின் இறைவன் எமக்கு செய்ய இருப்பது பற்றி மத் (18/35) இல் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

....

....

(x) ஆண்டவர் அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதைப் பற்றி தூயபவுல் (2 கொரி 1/19-20 ல்) எவ்வாறு கூறி உறுதிப்படுத்தியுள்ளார்?

....

....

(02 × 10 = 20 புள்ளிகள்)

**

[பக் 3 ஐப் பார்க்க.

776

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சை - 2016 (2017)

Catholic Daham Pasal Final Certificate Examination - 2016 (2017)

(04) செப வாழ்வு

The Life of Prayers

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

பகுதி II

3. (i) தூய பவுல் கொலோசிய குழுமத்திற்கு எழுதிய திருமுகத்தில் (கொலோ - 1/3) "இடைவிடாது செபிக்குமாறு" கூறியது ஏன் என்பதைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) "ஆபிரகாமின் வாழ்க்கை, செபவாழ்வில் வளர்ச்சியைக் காணும் வாழ்விற்கு சிறந்த உதாரணமாகும்" என்ற தலைப்பில் **100** சொற்களளவில் கட்டுரை ஒன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

4. (i) எமது செபம் வெற்றியளிக்க வேண்டுமாயின் நாம் யாரையெல்லாம் செபத்தின்போது நினைவு கூர வேண்டும் எனச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

(ii) எமது தேவைகளுக்காக ஆண்டவரிடம் மன்றாடும்போது இறைசித்தத்தை ஏற்றுக்கொள்ளுதலும் அதற்கு செவிசாய்தலும் முக்கியமானவை என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

5. (i) யேசு செபித்த சந்தர்ப்பங்கள் உள்ள சிலவற்றைத் தூய லூக்கா நற்செய்தியாளர் நமக்குக் காட்டியுள்ளார். அதன்படி கீழ்காணும் அட்டவணையில் வெற்றிடங்களை தாளில் பிரதி செய்து நிரப்புக.

நற்செய்தி	சந்தரப்பம்	நிகழ்வு
1. லூக் 3/21	வாழ்வு தொடங்குதல்	திருமுழுக்கு பெறும்போது
2. லூக் 5/16	தூதுப் பணி	....
3. லூக் 6/12	பொறுப்பளித்தல்	....
4. லூக் 9/28	இறை மகிமையை வெளிப்படுத்தல்	....
5. லூக் 11/1	இறையன்பைக் காட்டுதல்	....
6. லூக் 23/46	வாழ்வைப் பலியாக்குதல்	....

(05 புள்ளிகள்)

(ii) பழைய ஏற்பாட்டில் மேன்மையான நூல் திருப்பாடலாகும்" என்ற தலைப்பில் **100** சொற்களளவில் ஆக்கம் ஒன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

6. (i) செபங்களிலே மேன்மையான செபத்தில் காணக்கூடிய அடிப்படைப் பண்புகள் **ஐந்தைப்** பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) "குடும்ப செபமாலை வழியாக கிறிஸ்தவ குடும்பம் பெறும் அனுபவங்கள் பல" என்ற தலைப்பில் சஞ்சிகை ஒன்றிற்கு **100** சொற்களளவில் ஆக்கம் ஒன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

7. (i) முக்கிய திருவழிபாடாகிய திருப்பலியின் ஆரம்ப சடங்கில் அடங்கும் முக்கிய பிரிவுகள் **ஐந்தைப்** பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்" (மத் - 4/4). இத்தலைப்பின் கீழ் **100** சொற்களளவில் ஆக்கம் ஒன்றை எழுதுக. *(10 புள்ளிகள்)*

8. (i) திருத்தந்தை தூய 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் அறிமுகப்படுத்திய ஒளியின் மறைநிகழ்ச்சிகள் **ஐந்தைப்** பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) "உமது அரசு வருக" என பரலோக மந்திரத்தில் நாம் குறிப்பிடும் பகுதியில் வெளிப்படும் விடயங்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

9. கீழ்காணும் தலைப்புகளில் **மூன்றை** தெரிவு செய்து அவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(i) திருச்சபை வாழ்வில் செபம்

(ii) பரிந்துரை செபம்

(iii) வாய்ச்சொல் செபம் (செபம்)

(iv) "உமது நாமம் அர்ச்சிக்கப்படுவதாக

(05 x 3 = 15 புள்ளிகள்)

* * *